தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**P202** சமயத் தமிழ் இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. திருவிளையாடல் புராணத்தின் ஆசிரியர் யார்?
2. திருக்கை வழக்கம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
3. மறுபிறவி கோட்பாட்டை பௌத்தம் ஏற்கிறதா?
4. இஸ்லாமியத் தமிழிலக்கியங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
5. ஒட்டக்கூத்தர் எழுதிய பரணி நூல் எது?
6. வைணவக் காப்பியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. யாப்பு இலக்கணத்திற்குச் சமணர் தந்த நூல்கள் எவை?
8. திருக்காவலூர் அன்னையின் சிறப்பு பற்றி வீரமாமுனிவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
9. தலம் என்ற சொல்லின் பொருள் யாது?
10. கலியன் என்ற திருநாமம் பெற்ற ஆழ்வார் யார்?
11. யசோதரக் காவியத்தின் மையக் கருத்து யாது?
12. இஸ்லாமிய மெய்ஞான அடிப்படை நெறி யாது?
13. தேவாரத் திருமுறையை தொகுத்து வழங்கிய அருளாளர் யார்?
14. பெரியாழ்வார் எந்தச் சிற்றிலக்கியத்திற்கு வித்திட்டவர்?
15. வடக்கிருத்தல் என்றால் என்ன?

## பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. **(5x3=15)**

1. தொல்காப்பியத்தில் சிவன் பற்றி கூறும் கருத்து யாது?
2. மணிமேகலையில் சமண சமய நிலை குறித்து எழுதுக.
3. நீலகேசி தோன்ற காரணம் யாது?
4. பூதத்தாழ்வார் பற்றி விளக்குக.
5. தில்லைத்தல வரலாறு பற்றி விளக்குக.
6. பெண் மேம்பாடு குறித்து பிரதாப முதலியார் சரித்திரம் கூறுவது யாது?
7. சூடாமணி நிகண்டு பற்றி எழுதுக.
8. இந்திர விகாரங்கள் வழி அறியலாகும் செய்திகளைத் தருக.

## பிரிவு - 3

மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. **(3x15=45)**

1. (அ) தனிப்பாடல்கள் பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்துவின் உரைநடை படைப்பு குறித்து விவரிக்க.

2. (அ) சங்க இலக்கியத்தில் சமணம் இடப்பெறும் நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திருவாய்மொழியில் இடம்பெறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

3. (அ) பௌத்த சமயக் காப்பியங்கள் குறித்து விவரிக்க,

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியங்கள் பற்றி விரிவாக ஒரு கட்டுரை வரைக.

***